# 9

# நாவை அடக்குதல் (3:1-12)

*சராசரி நபர் ஒருவர் ஒரு நாளில், தட்டச்சு செய்யப்படும் இருபது பக்கங்களை நிரப்பப்போதுமான வார்த்தைகளைப் பேசுகிறார் என்று செய்தித்தொடர்பு நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளதை அறிதல் என்பது திகைக்கச் செய்வதாக உள்ளது. அது, ஒரு மாதத்தில், முன்னூறு பக்கங்கள் கொண்ட புத்தகங்களை நிரப்பப் போதுமானதாகவும், ஒரு ஆண்டில் அதுபோன்று இருபத்து நான்கு புத்தகங்களையும், ஐம்பது ஆண்டுகள் பேசுவதில் 1,200 தொகுப்புகளை நிரப்புவதாகவும் உள்ளது. பேசுதல் என்பது நமது வாழ்வில் மிகப்பெரும் பகுதியை எடுத்துக்கொள்கிறது என்பது தெளிவு. பெரும்பான்மை யான பள்ளிகள், பேசுவதற்கு ஒருவர் தமது திறனை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் படிப்புகளை அளிக்கும் அளவுக்கு, அது வாழ்வின் பெரும்பகுதி யாக உள்ளது.*

*நமது விசுவாசமானது நமது அன்றாட உரையாடலில் செயல்படுவதாக இருக்க வேண்டும் என்று யாக்கோபு அறிந்திருக்கும் அளவுக்கு, பேச்சு என்பது வாழ்வின் பெரும்பகுதியாக உள்ளது. யாக்கோபுவின் நிருபத்தை "கிறிஸ்தவ உரையாடலை மேம்படுத்துதல்" மீதான ஒரு பாடப்புத்தகம் என்று சிலர் அழைக்கும் அளவுக்கு, அவர் இந்தப் பாடக்கருத்தின்மீது மிகவும் அக்கறை செலுத்துகிறார். ஏறக்குறைய இந்த நிருபத்தின் வசனங்களில் 20 சதவிகிதமானது நமது பேச்சின் சில அம்சங்களைக் கையாள்கிறது.*

*நமது பாடத்தின் வசனப்பகுதியான யாக்கோபு 3:1-12, நாம் பேசும் வகையைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற மிகவும் விரிவான கலந்துரையாடலாக உள்ளது. இவ்வசனப்பகுதியில் யாக்கோபு, பிரச்சனையின் மையப்பகுதியான நாவு என்ற உயிர்நாடிக்கு நேராகச் செல்கின்றார். இருபதாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர், இவ்வசனப் பகுதியின் பிரச்சனையும் அது தொடர்பான செய்தியும், பழங்காலத்திற்கு உரிய ஒன்றாக மாத்திரம் இருப்பதில்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். நாம் யாவருமே ஒரு வேளையில் அல்லது இன்னொரு வேளையில், நமது நாவுடன் போராடுகிறோம்.*

## நாவின் முக்கியத்துவம் (3:1, 2)

*அவர் கூறுகிற முதன் முதல் வார்த்தைகள், பல ஆண்டுகளாகப் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் ஆகியோரால் தெளிவாக எண்ணப்படுதலுக்குக் காரணமாகி இருக்கின்றன: "என் சகோதரரே, ... உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (3:1). இது யாக்கோபு, வழக்கத்திற்கு மாறாகக் கூறுகிற ஒரு கூற்றாக உள்ளது. வேதவசனத்தின் மற்ற பகுதிகளில் இருந்து (எபிரெயர் 5:12; எபேசியர் 4:11), யாக்கோபு போதகர்களை ஊக்கம் இழக்கச் செய்வதை நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகக் காணப்படும். பொறுப்பு என்பது கணக்கு ஒப்புவித்தலைக் கொண்டுவருகிறது என்பதையே அவர் கூறுகிறார். அதனால்தான் அவர், போதகர்கள் மிகவும்*

கண்டிப்பான நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள் என்பதை நாம் அறிய வேண்டும் என்று விரும்புகிறார். போதித்தல் என்பது எந்த மனிதருக்கும் ஒரு அபாயகரமான தொழிலாகக் கருதப்பட வேண்டும் என்பது தெளிவு. விலைமதிப்பற்ற பாரம்பரியம் ஒன்று கிறிஸ்தவ போதகருக்கு உரியதாக உள்ளது. அவர் யூதத்துவ ரபீயின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார். நல்ல ரபீக்கள் பலர் மக்களுக்குப் போதிப்பதில் மிகச்சிறப்பான பணிகளைச் செய்தனர். ஆனால் ரபீக்கள், அவர்களின் தன்முனைப்பானது பெருக்கமடைந்து அவர்கள் அழிக்கப்படுமளவுக்கு, மரி யாதையின் வரம்பு மீறிய அளவினால் நடத்தப்பட்டனர். இளம் யூதர்கள் தங்கள் ரபீக்களைத் தங்கள் பெற்றோரைக் காட்டிலும் அதிகம் சிறப்பாக நடத்த வேண்டும் என்று போதிக்கப்படுமளவுக்கு, இந்த மரியாதை மிகப் பெரியதாக இருந்தது. எடுத்துக்காட்டாக, விரோதிகள் நகரத்தை முற்றுகையிட்டு இருந்து, பெற்றோர்களும் ரபீயும் பிடிக்கப்பட்டிருந்தால், முதலில் ரபீயே மீட்கப்பட வேண்டியவராக இருந்தார். மக்களிடமிருந்து அவ்வகையான உயர்மதிப்பைப் பெற்ற நிலையில், ரபீக்கள் இயேசு விவரித்தபடியாக (மத்தேயு 23:2-7) முடியக்கூடுவது எப்படி என்று புரிந்துகொள்ளுதல் கடினமாக இருப்பதில்லை. அதே அபாயம் இன்றைய நாட்களில் போதகர்களை, விசேஷமாக பிரசங்கியார்களை எதிர்கொள்கிறது. இளைஞர்கள் - மகிமை, கண்ணியம், நண்பர்கள் மற்றும் குடும்பத்திடம் இருந்து பாராட்டுதல் போன்ற - தவறான எல்லாக் காரணங்களுக்காகவும் பிரசங்கித்தலுக்குள் தலைதெறிக்க அவசரமாக நுழைகின்றனர் மற்றும் நெருக்கம், பணி மற்றும் வேதனை ஆகியவற்றைப் பற்றி அறிந்தபின் அதைவிட்டு வெளியேறுகின்றனர். அந்தக் காரணங்களுக்காகத் தொடர்ந்து பிரசங்கித்தலில் தரித்திருக்க சமாளித்துக் கொள்பவர்கள் பெரும்பாலும், ரபீயைப் போல் முரட்டுத் தனமானவர்களாகின்றனர்.

போதகர்களும் பிரசங்கியார்களும் மாத்திரம் தங்கள் நாவுகளினால் பாவம் செய்தல் என்ற விஷயத்தினால் சோதிக்கப்படுபவர்களாக இருப்பதில்லை. நாவு என்பது கட்டுப்படுத்தக் கடினமானதாக உள்ளது, ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது நாவைத் தொடர்ந்து விழிப்புடன் காத்துக்கொள்ளுதல் என்பது அவசியமானதாக உள்ளது. யாக்கோபு, "ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்" என்று கூறும்போது (3:2), கட்டுப்படுத்தக் கடினமான விஷயங்களின் பட்டியலில், நாவைக் கட்டுப்படுத்துதல் என்பது மிகவும் கடினமானதாக இருப்பதாக அவர் கூறுகிறார். நீங்கள் உங்கள் நாவைக் கட்டுப்படுத்த முடியும் என்றால், உங்களால் மற்ற ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்த முடியும்.

## நாவைக் கட்டுப்படுத்துதல் (3:3, 4)

நாவைக் கட்டுப்படுத்துவதில் அடங்கியுள்ள சிரமத்தின் காரணமாக, ஒவ்வொரு கிறிஸ்தவரும் இதில் தொடர்ந்து பணிசெய்தாக வேண்டும். யாக்கோபு பயன்படுத்துகிற "குதிரையின் வாயில் கடிவாளம் மற்றும் கப்பலில் உள்ள சுக்கான்" என்ற விவரிப்புகளை மாத்திரம் கண்ணோக்குங்கள். ஒரு கடிவாளமானது குதிரையின்மீது சவாரி செய்பவர், அந்தக் குதிரையைக் கட்டுப்படுத்த உதவுகிறது, மற்றும் சுக்கான் என்பது கப்பல் ஓட்டுபவர் ஒரு பெரிய கப்பலைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறது. யாக்கோபைப் பொறுத்தமட்டில், நாவு உடலைக்

கட்டுப்படுத்துகிறது. 5ம்வசனத்தில் அவர், “அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும் ...” என்று கூறுகிறார். சுக்கான் கப்பலைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது கடிவாளம் குதிரையைக் கட்டுப்படுத்துவதற்கோ, நிலையான இறுக்கம் தேவைப்படுகிறது. அதே விஷயம் நாவைப் பொறுத்த மட்டிலும்கூட உண்மையானதாக உள்ளது, நாம் நாவின்மீது நிலையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும், அல்லது நாவானது, உடல் காட்டுத்தனமாகச் செல்ல அனுமதித்துவிடும்.

யாக்கோபுவின் “விவரிப்பில்” இருந்து இன்னொரு கருத்தைக் கொண்டுவர முடியும். கடிவாளம், சுக்கான் மற்றும் நாவு ஆகியவை சிறியவைகளாக இருப்பது மாத்திரமின்றி, அவைகள் எதிர் ஆற்றல்களை வெற்றிகொள்பவையாக இருக்கவும் வேண்டும். கடிவாளமானது குதிரையின் முரட்டு சுபாவத்தை வெற்றிகொள்ள வேண்டும், மற்றும் சுக்கானானது கப்பலை அழித்துவிடக்கூடிய காற்றுகள் மற்றும் கடல் அலைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராட வேண்டும். அவ்வாறே, மனித நாவும்கூட, கட்டுப்படுத்தப்பட்டிருக்கவும் உடலை வழிநடத்தவும் அது எதிர்சக்திகளை வெற்றிகொள்ள வேண்டும். உள்ளாக இருக்கும் பழைய இயல்பும் நம்மைச் சுற்றிலும் இருக்கும் பாவம் நிறைந்த உலகமும், நமது வழியில் ஒவ்வொரு அடிவைப்பிலும் நம்முடன் போராடுகின்றன. குதிரை ஓட்டுபவர் கடிவாளத்தைக் கட்டுப்படுத்துவது போலவும், கப்பல் ஓட்டுபவர் சுக்கானைக் கட்டுப்படுத்துவது போலவும், நாம் நமது நாவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இயேசுவை வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. நாம், நமது ஜீவனின் அதிபதியை நமது உதடுகளின் ஆண்டவராக இருக்க அனுமதிக்க வேண்டும். சங்கீதக்காரரின் ஜெபத்தை எதிரொலித்தல் நமக்கு அவசியமானதாக உள்ளது: “கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்” (சங்கீதம் 141:3).

## நாவின் அபாயங்கள் (3:5-12)

கட்டுப்படுத்தப்படாத நாவின் அபாயங்களை யாக்கோபு அறிந்திருக்கிறார் என்பதால் அவர், நாவைக் கட்டுப்படுத்துதல் பற்றி அவ்வளவு பலமாக வேண்டுகோள் விடுக்க வேண்டியவராக இருந்தார். நமக்கு அந்த அபாயங்களைப் பற்றித் தகவல் அறிவிப்பதில் அவர், கட்டுப்படுத்தப்படாத நாவின் எச்சரிக்கை செய்யும் மூன்று உண்மைகளைப் பட்டியலிடுகிறார்.

முதலாவதாக, இது உடல் முழுவதையும் கறைப்படுத்தக் கூடும். யாக்கோபு பின்வருமாறு கூறுகிறார்:

> ... பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! (3:5, 6).

அவர், நாவு ஏற்படுத்தக் கூடிய சேதமானது, காட்டுத்தீயினால் ஏற்படுத்தப்படும் சேதத்தைப் போல் உள்ளது என்று கூறுகிறார். ஒரு காட்டுத்தீயானது, கட்டுப்படுத்தக் கூடாத வகையில் எரிந்து, கடைசியில் அது தொடங்கிய இடத்தில் இருந்து வெகுதூரத்தில் மதிப்புள்ள உடைமைகளை அழித்துவிட

*முடியும். இதே விஷயம் நாவைப் பொறுத்தமட்டிலும் உண்மையாக உள்ளது. நாவில் இருந்து வருகிற ஒரு சிறு பொறியானது, கட்டுப்படுத்த இயலாத வகையில் தீவிரமாகக்கூடும் மற்றும் அதன் தொடக்கத்தில் இருந்து வெகுதூரத்தில் ஆயுள் சக்கரங்களை அழிக்கிறது. அது "நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!" என்று யாக்கோபு கூறுவதில் வியப்பெதுவும் இல்லை. நாம் இவ்வாறு ஒருவரையொருவர் அழித்துக்கொள்ளும்போது, பிசாசானவன் மகிழ்ச்சி அடைகிறான்.*

*இரண்டாவதாக, நாவு வசப்படுத்தப்படக் கூடாததாக உள்ளது. "சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம்நிறைந்தது மாயிருக்கிறது" (3:7, 8) என்பது அதைப் பற்றி யாக்கோபு, ஆவியானவரால் ஏவப்பட்டுக் கூறும் வழிமுறையாக உள்ளது. மனிதர்கள் தங்கள் சொந்த நாவுகளை அடக்க இயலாதவர்களாக உள்ளனர் என்பது தெளிவு. அந்த முரட்டுத்தனமான, ஓய்வற்ற பொல்லாங்கின்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு, யாரேனும் ஒருவர் அல்லது ஏதேனும் ஒரு விஷயம், அந்தக் கட்டுப்படுத்தும் செயலைச் செய்தாக வேண்டும். பெரிய கப்பலானது சுக்கானால் கட்டுப்படுத்தப்படுவதைப் போன்று, சுக்கானானது கப்பல் ஓட்டும் மனிதரால் கட்டுப்படுத்தப்படுகிறது. மீண்டுமாக நாம், நமது ஜீவனின் அதிபதியை நமது உதடுகளுக்குக் கர்த்தராக இருக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் ஒருவரே அந்த தீவிரமான நெருப்பைக் கட்டுப்படுத்தவும் அதை சக்தியின் ஆதாரமூலமாக்கவும் போதிய வல்லமை நிறைந்தவராக இருக்கிறார்.*

*மூன்றாவதாக, கட்டுப்படுத்தப்படாத நாவானது, கிறிஸ்தவரின் விசுவாசத்திற்குச் சீர்பொருத்தம் இல்லாத வகையில் செயல்படுகிறது என்று யாக்கோபு கூறுகிறார். இதற்கு அவர் பயன்படுத்தும் விவரிப்பு மிகவும் கூர்மைப்படுத்தப்பட்டதாக உள்ளது: "ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?" (3:11). இந்த விவரிப்பின் கேள்விக்கும், "இல்லை" என்பதே எதிரொலிக்கும் பதிலாக உள்ளது, அது "ஆம்" என்று இருக்க வேண்டுமென்றால், அது நாம் அறிந்துள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் எதிரானதாக இருப்பதாகும். "என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும் திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா?" என்று கேட்பதன் மூலம் (3:12) யாக்கோபு இந்த விவரிப்பை இன்னும் சற்றே தூரமாக எடுத்துச் செல்கிறார். ஒரு கிறிஸ்தவர் ஞாயிற்றுக்கிழமையன்று துதியைப் பாடத் தமது நாவைப் பயன்படுத்திவிட்டு, பின்பு சுற்றிலும் திரும்பி வாரத்தின் எஞ்சிய நாட்கள் யாவற்றிலும் தமது அயலகத்தவர்களைச் சபிப்பதற்குப் பயன்படுத்துதல் என்பதைக் காட்டிலும் அதிகம் சீர்பொருத்தமற்றது எதுவும் இல்லை என்ற கருத்தைக் கிறிஸ்தவர்கள் காண வேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். சபிக்கிற, ஆணையிடுகிற அல்லது புறங்கூறுகிற கிறிஸ்தவர், உண்மையான பிரச்சனை ஒன்றைக் கொண்டுள்ளார் (நீதிமொழிகள் 4:23; மத்தேயு 15:18). ஆபாசமான வாயுடையவர், அசுத்தமான நகைச்சுவைகளைக் கூறுபவர், கொடூரமான வார்த்தைகளை உடையவர் மற்றும் சமீபத்திய கிசுகிசுப் பேச்சைப் பேசுபவர் என்று அறியப்பட்டுள்ள நபர், தனிச்சிறப்பான*

*கிறிஸ்தவர்களின் பட்டியலில் இடம்பெறுவதில்லை. ஏன்? ஏனென்றால், இந்த உலகம்கூட கட்டுப்படுத்தப்படாத நாவின் இந்த சீரிபொருத்தமற்றதைக் கொண்டிருத்தலைக்காண முடியும்.*

## முடிவுரை

*சங்கீதக்காரர், "என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்" என்று கூறியுள்ளார் (சங்கீதம் 39:1). நமது விசுவாசம் நமது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த நாம் எவ்வாறு அனுமதிக்கிறோம்? இயேசுவை நமது வாழ்வில் ஆண்டவராக ஏற்றுக்கொள்வதினாலேயே! இதைச் செய்ய, நாம் கூறுகின்றவற்றைக் கட்டுப்படுத்த அவரை அனுமதித்தல் என்பதைக் காட்டிலும் அதிகம் அறைகூவல் உள்ள கருத்து வேறு எதுவும் இல்லை!*